ஆடவரின் விளையாட்டுக் கருவியல்லர் பெண்டிர்!

Phone No. 4502 — Regd. No. M. 5458
விலை அணா ஒன்று | [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (23—12—49) வெளியூர் (24—12—49) [இதழ் 124

இந்து சட்டத் தொகுப்பு மசோதா இவ்விழிநிலையைத் துடைத் தழிக்கும்

—:0:—

திக்கற்ற கன்னியரும் வகையற்ற விதவையரும் வாழ வழி வேண்டாமா?

—(0)—

சொத்துரிமைக்குத் தாளிட்டு, ஒழுக்க ஈனத்தை அனுமதிப்பதா?

இந்து சட்டத்தொகுப்பு மசோதா பெரும் புயலொன்றைக் கிளப்பி விட்டுவிட்டது. சொத்து, வாரிசு ஆகிய விஷயங்களில் ஆண்களோடு பெண்களையும் சமபாத்தியதை யுடையோராக்குவதும், அவர்களுக்குச் சொத்துரிமையும், மணவிலக்குரிமையும் வழங்குவதும், இருதார மண முறையை அறவே ஒழிப்பதும் மேற்படி மசோதாவின் நோக்கமாகும். இம்சோதாவுக்கு எதிராக ஒரு சில பெண்கள் படாடோப மன்னர் வகுப்பைச் சேர்ந்த வொருவர் தலைமையில் திரண்டு நின்று ஆட்சேபனை காட்டியிருப்பது அதிசயிக்கத்தக்கதேயாகு ; தன்னல மேம்பாட்டுக்கான காரணங்கள் சிலபலவற்றின் அடிப்படையிலேயே அவர்களது எதிர்ப்பு எழுந்திருக்கிறது.

தந்தையின் சொத்துக்கு ஆண்பிள்ளைகளைப் போலவே பெண் பிள்ளைகளும் சமவுரிமையுடையவர்களானல், ஆண்களுடைய சொத்து பெண்களுக்கும் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுவிடும். இப்போது மாமிமார்களாலும் மைத்துனிகளாலும் ஆட்டிப்படைக்கப்படும் (ஆடவார் தம்) மனைவியர் அந்தஸ்தும் (இச் சொத்து காரணமாக) உயர்ந்துவிடுகிறது. ஆடவரின் விளையாட்டுப் பொருள்களாக பெண்டிர் இருந்துவரும் தன்மை, இத்தகைய பொருளாதாரவிடுதலை காரணமாக மறைந்தொழிந்து விடும்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்காது மறுக்கப்பட்டு வந்திருப்பதே, பெண்களின் ஒழுக்கக் கேடுக்குப் பெருங் காரணமாயிருந்து வந்திருக்கிறது, திக்கற்ற நிலையில் தவிக்க விடப்படுகின்ற கன்னிப் பெண்களும் விதைவையரும் ஒழுக்க ஈன காரியங்களில் ஈடுபடுவது தவிர, ஆடவரின் தீச்செயல்களுக்குப் பணிவது தவிர, வேறுவழியில்லாத துன்மையை யடைகின்றனர். அவலக் கவலையில் ஆழ்ந்திருக்கும் மனைவியொருத்திக்கு கணவனும் காட்டுமிராண்டித் தலைமையைக் கடந்து கொள்வானல, நிலைமைபரிதாபகரமேயன்று, அவள் புறக்கடைக் காதலனோடு ஓடமெடுக்கிருள், அல்லது ஒழுக்கஈன காரியங்களில் ஈடுபடுகிருள்.

— 'போரம்'

கடற்படைப் பலத்தில் சிறந்தோங்கும் சோவியத்!

அமெரிக்காவைவிட அதிக 'குருய்ஸர்கள்'

யுனைடெட் ஸ்டேட்ஸைக் காட்டிலும் ரஷ்யாவிடம் அதிகமான 'குருய்ஸர்' கப்பல்கள் இருக்கின்றனவென்றும், சோவியத் கப்பல் கட்டும் தொழில் 1940-ம் ஆண்டைக்காட்டிலும் இப்போது, இரண்டுமடங்காக வளர்ந்திருக்கிறதென்றும் யு. எஸ் கடற்படை நடவடிக்கைத் தலைவர் அட்மைரல் பாரஸ்ட் பி ஷெர்மன் பாஸ்டனில் டிச. 21-ல் குறிப்பிட்டார்.

சோவியத் ரஷ்யாவில் கட்டப்படும் குருய்ஸர் கப்பல்கள்கனமும், விரைவு மிக்கனவாய்த் திகழ்கின்ரனவென்றும், சோவியத்திடம் 14 குருய்ஸர்கள் உள்ளனவென்றும், ஆனல் யு. எஸ். எஸிடம் துரித நடவடிக்கைகளுக்குகந்ததான குருய்ஸர்கள் 13-தானுள்ளனவென்றும் அவர் குறிப்பிட்டார்.

சோவியத் கடற்படை பலம்பற்றி தனக்குத்தெரியவரும் புள்ளிவிவரம் அட்மைரல் ஷெர்மன் அடியிற்கண்டவாறு தெரிவித்தார். மூன்று பழம் பெரும் போர்க் கப்பல்கள், 14-குருய்ஸர்கள், 110நாசகாரிய கப்பல்கள், 270 நீர்மூழ்கிக் கப்பல்கள்.

ஸ்டாலின் பிறந்த நாளில் ஆண்டுதோறும் சமாதானப் பரிசுகள்

—(0)—

அரசியல் - மத - இன வேறுபாடின்றி அனைத்து நாட்டவர்க்கும் வழங்கப்படும்

மார்ஷல் ஸ்டாலினவாகளின் பிறந்த நாளன்று, ஒவ்வொரு ஆண்டும் ஐந்து முதல் பத்து உலக சமாதானப் பரிசுகள் வரை வழங்கப் பெறுமென்று, மாஸ்கோ வாளொலி நிலையம் டிசம்பர் 20-ந் தேதியிரவு அறிவித்தது. அரசியல், மத, இன வேறுபாடின்றி இப்பரிசுகள் உலக நாடுகளனைத்தைச் சேர்ந்த குடிமக்களுக்கும் வழங்கப்படும். சர்வதேச ஸ்டாலின் பரிசு பெற்றதற்கான சான்றிதழ், ஸ்டாலின் உருவம் பொறிக்கப் பெற்ற தங்க மெடல், லட்சம் ரூபாய்கள் ரொக்கம் ஆகியவை அடங்கப் பெற்றவையாகும் இப்பரிசுகள்.

இஸ்ரேல் விட்டு ஜெர்மன் யூதர்கள் வெளியேற்றம்

லண்டன், டிச. 22—

இஸ்ரேலில் பொருளாதார நெருக்கடி மூற்றுவதின் காரணம், அங்கு குடியேறிய ஜெர்மன் யூதர்கள் தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் ஜெர்மனிக்கே திரும்பி வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இவர்களில் பலர் யூத அதிகாரிகளின் அனுமதியைப் பெருமலேயே சென்றுவிட்டனராம்.

அமெரிக்க விமர்சகர் கயிறு திரிப்பு!

லண்டன், டிச. 21—

மஞ்சூரியா ஆதிக்க விஷயமாக மாசேதுங்கிற்கும் ஸ்டாலினுக்கும் தகராறு ஏற்படும் போல் அறிகுறிகள் காணப்படுகின்றன வென்று, சில அமெரிக்க விமர்சகர்கள் கூறுகின்றனர். (ருனோப்)

பாரசீக ஷா பாகிஸ்தான் வருகை

இப்போது அமெரிக்கா சென்றுள்ள பாரசீக ஷா பெப்ரவரி மத்தியில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வாரெனத் தெரிகிறது.

டிசம்பர் 23 முதல்
சென்னை
பாரகன் · மஹாராணி · லக்ஷ்மி
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
வாழ்க்கை

மதுரை..... சென்ட்ரல்
கோவை. கர்னடிக். வெரைட்டி
பெங்களூர். சூபர், மினர்வா, ஆபரா
திருச்சிராப்பள்ளி.. ஸ்டார்
சேலம்... சென்ட்ரல்
காரைக்குடி. சரஸ்வதி
வேலூர்... நேஷனல் (சாயி பாபா)

கும்பகோணம் .... விஜயலக்ஷ்மி
திருநெல்வேலி .... பாபுலர்
சிதம்பரம் .... முத்தையா பலஸ்
புதுக்கோட்டை .... வொஸ்
ஈரோடு .... வின்ஸண்ட்ஸ் டவுன் ஹவுஸ்
மைசூர் .... ராஜ்கமால்

AVM புரொடக்ஷன்ஸ்

மாலை மணி

சென்னை 23—12—49 வெள்ளிக்கிழமை

மேலிடமா? : யதேச்சதிகாரமா?

'கேட்ட வரந்தரும் கீர்த்தி வாய்ந்த' காங்கிரஸ் மேலிடம், கருநாடகக் காங்கிரஸ் கமிட்டியின் கோரிக்கைகளுக்கு இறுதியாக இணங்க மறுத்து விட்டது. 'வரங்கொடுக்க' மறுத்து விட்டது என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் மேலிடம் கருநாடகக் காங்கிரஸ் கமிட்டியைச் 'சபிக்க'வும் செய்து விட்டது.

"சட்டசபைகளிலிருந்து ராஜிநாமா செய்வதற்குக் கருநாடக மாகாணக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி கோரிய அனுமதி, காரியக் கமிட்டியின் முடிவுகளை எதிர்த்துக் காரியக் கமிட்டியை பயமுறுத்தும் செய்கையேயாகும். அச்செய்கையானது இப்பொழுதுள்ள நிலைமையில் உசிதக் குறைவானதாகும்" என்று, அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

வெள்ளைக்கார ஏகாதிபத்திய ஆட்சி, பிரிந்தாளும் பண்பு கொண்டது—ஒரே மக்களை ஒன்று சேர்ந்து வாழவிடாதது—மக்களின் நல்ல அரசியல் வாழ்வு அமைப்புக்கு மொழிவாரி மாகாணப் பிரிவினையே ஏற்ற மருந்தாகும்—எங்களது சுயாட்சியிலே அதை முக்கியத் திட்டமாகக் கருதி நடைமுறையில் காட்டுவோம், என்றெல்லாம் அந்த நாட்களில் முழக்கமிட்டுத் தீர்த்த காங்கிரஸ் மேலிடம், இப்பொழுது மொழிவாரி மாகாணப் பிரிவினைக் கோரிக்கையைக் கேட்கவும் மறுக்கிறது. ஏன் இந்த மனமாற்றம்?

அன்று 'பரந்த' நோக்கமாகக் கருதப்பட்ட ஒரு கொள்கை, இன்று 'குறுகிய' கொள்கையாகக் காணப்படுகிறது, காங்கிரஸ் மேலிடத்துக்கு. கோரிக்கை கேட்பது வேறு கட்சி அல்ல; கருநாடகக் காங்கிரஸ்தான். கருநாடகக் காங்கிரஸ் கருநாடகத்தில் சிறிய அளவில் இருக்கும் கட்சியல்ல; பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதாகக் காங்கிரஸ்காரர்களாலேயே புகழப்பட்டு வரும் கட்சி. அப்படிப்பட்ட கருநாடகக் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கோரிக்கையைத்தான் மேலிடக் காங்கிரஸ் மறுக்கத் துணிகிறது. ஏன்?

மேலும், அ. இ. காங்கிரஸ் காரியக் கமிட்டி; "சம்பந்தப்பட்ட மக்களின் பெருத்த மெஜாரிட்டியின் சம்மதமின்றி இவ்விஷயத்தில் முடிவு செய்ய முடியாது." என்று தீர்ப்புக் கூறியுள்ளது. மேலும் பல சமயங்களில், மாகாண மக்களின் விருப்பு வெறுப்புகளை மாகாணக் காங்கிரஸ் எடுத்துக் காட்டும் சாதனமாக விளங்குகிறது என்று கொள்ளப்பட்டு, இந்த ஒரு சந்தர்ப்பத்தில் "மக்களின் பெருத்த மெஜாரட்டியின் சம்மதமின்றி முடிவு செய்ய முடியாது" என்றும் கொள்ளத்தொடங்குவானேன்!

காங்கிரஸ் மேலிடம், தான் செய்துவந்த தவறுகளின் விளைவுகளை எதிர்நோக்கி இருந்து நிற்கவேண்டிய நிலைமையிலிருக்கிறது. மொழிவாரி உணர்ச்சியை அன்று காங்கிரஸ் ஊட்டியது; அதனை மக்கள் ஏற்றுக் கொண்டனர். வடவர்கள் மொழிவாரி உணர்ச்சியை, மொழி-மாகாண வெறியுணர்ச்சியாக மாற்றிக்கொண்டும், மேலிடத்தைத் தங்கள் தாக ஆக்கிக்கொண்டும், தென்னாட்டைச் சுரண்டுவது—அதன் மீது ஆதிக்கஞ் செலுத்துவதுமான நிலைமைக்கு வளர்ந்தார்கள். இன்றுள்ள நிலையில், தென்னாட்டவர்கள் சிதறி பலவேறு அமைப்புகளில் கிடந்து உழல்வது வடவர் ஆதிக்கம் செலுத்துவதற்கு மிகவும் வசதியாக இருக்கிறது. தென்னாடு மொழிவாரி மாகாணங்களாகப் பிரிந்துவிடின், மொழி-இனம்-கலை-பண்பு-பழக்கவழக்கம்-வாணிகம்-விளைவு-செல்வப் பெருக்கு-சுகவாழ்வு ஆகியவை பற்றித் தனித்தனி அக்கறை கொள்ளத் தொடங்கி விடுவார்கள். அது தமது ஆதிக்கக் கொள்கைக்கு இடமளிக்காமல் போய்விடும்; ஆகவே அவ்வெண்ணம் எழுச்சிக்கு இடமளிக்காமல் பாதுகாத்துக் கொள்வதே சிறந்தவழி; இருக்கும் நிலைமையே அப்படியே காப்பாற்றி வரவேண்டும், என்ற எண்ணத்தில் வடவர் ஆதிக்கம் மிகுதியாக உடைய காங்கிரஸ் மேலிடம் மொழிவாரி மாகாணப் பிரிவினைக்கு இணங்க மறுக்கிறது.

'கருநாடக மாகாண அமைப்புப் பிரச்னையில் மைசூர் சமஸ்தானத்தின் எதிர்காலம் போன்ற பெரிய அரசியல் சட்டப் பிரச்னைகள் அடங்கியிருப்பதாகக் காரணங்காட்டிக் கோரிக்கை மறுக்கிறது காங்கிரஸ் மேலிடம். சமஸ்தானாதிபதிகளையெல்லாம் சாதாரண மனிதர்களாக்கி, சமஸ்தான ஆட்சியை மக்களாட்சியாக மாற்றிய பெருமை அனைத்தும் படேல் ஒருவருக்கே உண்டு என்று காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் தாம் புகழ்மாலை சூட்டுகிறார்களே! அப்படிப்பட்ட பட்டேல் இருக்கும்போது, மைசூர் ஆட்சியை மாற்றுவதோ—திருத்தி அமைப்பதோ—அழுப்பமதா? இல்லை? மேலும் கருநாடகக் காங்கிரஸ் தலைவர் அரசியலார் தலைவராகக் கொண்ட பொறுப்புடைச்செய்ய வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்கிறோம் என்ற கருத்துப் படக் கூறியிருக்கும்போது, மைசூர் அரசரின் எதிர்காலம் பற்றிக் காங்கிரஸ் மேலிடம் கவலைப்படுவானேன்?

கருநாடகக் காங்கிரஸ்காரர்கள் தாம் கன்னடியர்கள் என்ற விழிப்புணர்ச்சி கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்! தாம் கன்னடியர்கள் என்ற இன உணர்வு, காங்கிரஸ்காரர்கள் என்பதை மறக்கச்செய்துள்ளது! அது கண்டு காங்கிரஸ் மேலிடம், இன்று கலங்கி என்ன பலன் காணமுடியும்! அன்று ஊட்டப்பட்ட உணர்ச்சி இன்று வேலைசெய்கிறது! அதைத் தடுக்கப்பார்க்கிறது மேலிடம்; முடியவில்லை!

காங்கிரஸ் மேலிடத்தார் தங்களுக்குச் சாதகமாக ஏற்படும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதும், பாதகமாக வரும் முடிவுகளை முறியடிப்பதுமான கொள்கையைத்தான் மாகாணக் காங்கிரஸிடம் இதுவரையிலும் கையாண்டு வருகிறார்கள். மாகாணங்களிலுள்ள நிலைமைகளை அல்ல காங்கிரஸ் மேலிடம் கவனிக்கவிரும்புவது. அது விரும்புவதெல்லாம் தன்னிலையைப் பற்றியே!

காங்கிரஸ் மேலிடம் யதேச்சாதிகார பீடமாகவே இதுவரையிலும் காட்சி அளித்து வந்தது; வருகிறது. மாகாணங்கள் குனிந்துகொடுத்துக் குட்டுகள் வாங்கிக்கொண்டே இருந்தன. கருநாடக மாகாணம் தலைநிமிர்ந்து பார்க்கத் தொடங்கியிருக்கிறது. மேலிடமும் அதன் முகத்தில் சீற்றத்தை இப்பொழுது வீசியுள்ளது. அடுத்து கருநாடக மாகாணக் காங்கிரஸ் காரியக் கமிட்டி, "மேலிடமா? யதேச்சதிகாரமா?" என்று கேட்குமா? அல்லது அடங்கி யொடுங்கிப் பதுங்குமா? என்பதை இருந்து பார்க்கவேண்டும். பார்ப்போம்!

அறிவுக் கதிர்!

இப்போதுள்ள சமூக அமைப்பில் நம்பிக்கை வைக்கவேண்டாம். இது தவிர்க்க இயலாததொரு புரட்சிக்கு உட்பட்டது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்குப் பின் வருபவர் சமாளிக்க வேண்டியிருக்கும் நிலைமை என்ன வாயிருக்கும் என்பதை, நீங்கள் தீர்க்க தரிசனஞ்செய்து சொல்ல முடியாது. அதை நீங்கள் தடுக்கவும் முடியாது, பெரியோர் சிறியோராகலாம்; செல்வர் வறியோராகலாம், மன்னன் சாமானிய மனிதராகலாம், நாம் நெருக்கடியானதொரு நிலைமையை—புரட்சிக் காலத்தை—நெருங்கிவருகிறோம்.

—ரூஸ்ஸோ.

பெண் அரசுப் பிரதிநிதியின் கணவர் அந்தஸ்து என்ன?

[illegible], டிச. 22—

[illegible]

உரிமைக்கு மதிப்பு தாரீர்; இன்றேல் ஓடஓட விரட்டிடுவோம்!

சீனுவின் 'வெற்றியைக் கண்டேனும் சிந்தை தெளிக!

பிரஞ்சு ஆட்சியாளருக்கு தோழர் ஹோசிமின் எச்சரிக்கை!

பிரஞ்சுத் துருப்புகள் அடியோடு விரட்டப்படும்வரையில் போர் நிற்காது. உண்மையான தேசிய ஐக்கியமும், சுதந்திரமும் மீட்கப்பட வேண்டும்.

பிரான்ஸ் இன்று சர்வதேச உதவியை நாடுகிறது. ஆனால் உலக முற்போக்கு சக்திகளின் ஆதரவு எங்களுக்கு இருக்கிறது. சில மக்களின் வெற்று இதயம் கோர் எடுத்துக்காட்டு.

என்று இந்தோசீன உள்நாட்டுப் போரின் மூன்றாவது ஆண்டு விழாவை யொட்டி நிகழ்த்திய ரேடியோ பிரசங்க மொன்றில், வியட்னாம் படைத் தலைவர் டாக்டர் ஹோசிமின் பேசியுள்ளார்.

காலனி ஆட்சி என்ற முறையில் பிரஞ்சு ஆட்சியாளர் இந்தோசீனாவைப் பல ஆண்டுகளாக அடக்கு முறையின் துணை கொண்டு ஆண்டு வருகின்றனர். இரண்டாவது உலகப்போருக்குப் பின் இந்தியா, பர்மா, இலங்கை [illegible] [illegible] வெளியேற்றப்பட்டன. [illegible] இனி [illegible] ஆசியாவை [illegible] முடியாது என்பதை பிரிட்டன் உணர்ந்து கொண்டதுபோலும். இதனால் காலநிலைப்படி [illegible] [illegible] பிரஞ்சு அரசியலாருக்கு இல்லாமற் போயிற்று. ஆகவேதான், பிரிட்டனைப் பின்பற்ற வேண்டிய பிரான்ஸ் [illegible] மறந்து, சண்டித்தனமாக ஆயுதங்களின் துணையும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டப் பார்க்கிறது. இந்தோசீனர் [illegible] [illegible] வீரமாக எதிர்த்து நின்று, ஆட்சி முறையைப் பயன் [illegible] தன் ஆட்சியை இந்தோசீனாவில் நீடிக்கச் செய்யலாம் என்ற எண்ணத்தோடு, [illegible] வாங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் [illegible] ஆட்டங்கண்டிருக்கிறது. பிரஞ்சு துருப்புகள் படுமோசமாகத் தாக்கப்பட்டுத் தோற்றுவருகின்றன. இதைத்தான் தோழர் ஹோசிமின் சுட்டிக்காட்டி "பிரஞ்சு துருப்புகள் அடியோடு விரட்டப்படும் வரையில் போர் நிற்காது" என்றார்.

தோழர் ஹோசிமினின் இந்த எச்சரிக்கைக்கு செவி சாய்த்து, நல்ல முறையில் ஆட்சியை இந்தோசீன மக்களிடம் ஒப்படைத்துவிடுவது [illegible] பிரஞ்சு ஆட்சியாளருக்கு [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] சீனாவுக்கும் [illegible]. இருக்க வேண்டிய [illegible] அற்றுப்போகும்படியான நிலைமை ஏற்படும் என்பதை, பிரஞ்சு ஆட்சியாளர் தம் கருத்தில் பதிய வைத்துக்கொள்வார்களாக.

சர்வதேச உதவி கிடைக்கும், ஆகவே எதுவேண்டுமானாலும் செய்யலாமென்பது பிரஞ்சு சர்க்காரின் எண்ணம் போலும்! அப்படியானால் தோழர் ஹோசிமின் குறிப்பிட்டதுபோல, இந்தோசீனாவுக்கு உலக முற்போக்குச் சக்திகளின் ஆதரவு கிடைக்கும் என்பது திண்ணம். அதேதுள்ள சீனு சிவப்பாகி வருவதே இதற்குப்போதிய சான்று. அது மட்டுமல்ல, சீனப்படைகள் இந்தோனேஷியாவையும் எட்டிப் பார்க்க ஆரம்பித்து விட்டன என்ற செய்தி இதனை உறுதிப்படுத்துவதாகும். எனவே, இந்த சீனுவும் சிவப்பாக மாறுமுன்னமே பிரான்ஸ் தன் கடமையைச் செய்யுமென நம்புவோம்.

புகார்கள் புகைந்து போகின்றன!

"மந்திரிகள்மீது பொருத்தமில்லாத முறையில் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டும், அதுபற்றி பிரசாரம் செய்யப்பட்டும் வருகிறது. ஆகவே இதுபற்றி நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டு நிலைமை தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்பதை சர்க்கார் உணர்கிறதா?" என்ற கேள்வியை, அண்மையில் சட்டசபையில் தோழர் இஸ்மாயில் எழுப்பினர்.

இக்கேள்விக்குப் பதில் சொல்லும்போது அமைச்சர் கோபால் ரெட்டி அவர்கள்,

"இம்மாதிரி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமில்லை, ஏனெனில் புகார்கள் ஆதாரமற்றவை என்று சர்க்கார் கருதுகிறது" என்றுகூறி யிருக்கிறார்.

இதிலிருந்து மந்திரிகள் மீது சாட்டப்பெற்றக் குற்றச் சாட்டுகள் வலியிழந்து விட்டன, இனி அவைபற்றிய பேச்சு எழாது என்பது தெளிவாகிறது. காங்கிரஸ் ஆட்சியில் எத்தனையோ விஷயங்கள் புகைந்து போயிருக்கும்போது, இந்தப் புகார்கள் புகைந்துபோவதுதானா ஆச்சரியம்!

காஷ்மீர் தகராறின் இறுதிக் கட்டம்!

லண்டன், டிச. 21—

காஷ்மீர் தகராறைத் தீர்க்க இருதரப்பினருடன் சமரசம் பேசும்படி ஜெனரல் மக்னாட்டனை பாதுகாப்புக் கவுன்சில் நியமித்திருப்பது இப்பிரச்னையை சமரசமாகத் தீர்ப்பதற்கு உதவுமென்று இங்கு நம்பப்படுகிறது.

காஷ்மீர் தகராறு கடைசிக் கட்டத்தை அடைந்துவிட்டதென்று சொல்லலாமென்று இங்கு கூறப்படுகிறது.

கோவை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்ட விவரம்

கோவை, டிச 20—

18—12—49 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயற் குழுக் கூட்டம், கோவை நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் மாவட்ட கழக பொதுச் செயலாளர் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் மாவட்ட செயற் குழு உறுப்பினர்கள் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர். விசேஷ அழைப்பின் பேரில் சென்னைத் தோழர் என் வி. நடராசன் அவர்கள் கலந்து கொண்டார்.

நடவடிக்கை விவரம்:—

(1) கூட்டத்திற்கு வர இயலாதது குறித்து கூட்ட நடவடிக்கைகளை அங்கீகரிப்பதாகவும் வந்திருந்த செயற்குழு உறுப்பினர்களின் கடிதங்கள் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

(2) மாவட்டக் கழகத்திற்கு உறுப்பினர்களாக கீழ்க்கண்டவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வந்த குன்னூர் சண்டக்கா முத்து ஆகிய கிளைகளின் கடிதங்கள் படிக்கப்பட்டு கீழ்கண்டவர்களை செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளபபட்டது.

குன்னூர் பி. ஆறுமுகம், சண்டக்கா முத்தூர் சு. ரா. ராமசாமி.

(3) மாவட்ட செயற்குழுவில் மாகாண பொதுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் கே. ஏ. மதியழகன், என். பிள்ளாமி, வி. நடராச மூவரையும் சேர்த்துக் கொள்ளபட்டது.

(4) மாவட்ட செயற்குழுவிற்கு ஐந்து (5 பேர்) பேருக்கு மேற்படாமல் முக்கிய உறுப்பினர்களை செயற்குழுவில் சேர்த்துக் கொண்டு அந்த வர் கிளைக் கழகங்களுக்குத் தெரியப்படுத்தும்படி மாவட்ட கழகச் செயலாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

(5) உமேல தாலுகா கனியூரில் கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி கோரிவந்த கனியூர் கழகச் செயலாளரின் கடிதம்படிக்கப்பட்டு மாநாட்டை 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29-ந் நாள் கனியூரில் நடத்த அனுமதிக்கப்பட்டது.

(5-அ) மத்திய திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை குழுவினர் நடிக்கும் நாடகங்களை, கோவையில் பிப்ரவரி மாத மத்தியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, நாடகங்களைக் கவனிக்க கீழ்க்கண்டவர்களைக் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

பி. பழனிசாமி, என். ஏ ராசமாணிக்கம், ஏ. பொன்னுசாமி, சி. சீனிவாசன், சி. வி கோவாசு.

(6) 1950 ஜனவரி 31க்தேதிக்குள் மாவட்டம் பூராவிலும் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை, கிளைக்கழகங்கள் தொடர்ந்து செய்து அத்தேதிக்குள் ரசீதுகளையும் மாவட்ட—மத்திய கழக சந்தா தொகையையும் மாவட்டக் கமிட்டிக்கு தலைமையகம் அனுப்பிவைக்க வேண்டுமென்று, கிளைக்கழகச் செயலாளர்களை இக்குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

இறுதியாக தோழர் என். வி நடராசன் அவர்கள் கழகத்தின் தற்போதைய அமைப்பு முறையில் கழகத்தோழர்கள் கலந்து கொள்ளவேண்டிய முறைகளைப் பற்றி விளக்கமாக கருத்துரை பகர்ந்தபின் செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் பிற்பகல் 1-30 மணிக்கு இனிது முடிவுற்றது. (வி-உ)

டச்சுக் குடும்பங்கள் மூட்டை கட்டுகின்றன!

லண்டன், டிச 22—

இந்தோனேஷியா சுதந்திரம் பெறுவதை பொட்டி டச்சு தோட்ட முதலாளிகள், சோல்ஜர்கள் இவர்களின் குடும்பங்கள் தங்கள் நாடடுக்கு மூட்டை கட்ட ஆரம்பித்துவிட்டனர் இதுவரை 4500-பேர் பெண்களும், குழந்தைகளும் ஏற்கனவேயே அனுபபப்பட்டுவிட்டனர்

மார்ச்சுக்குள் இன்னும் 3000 பேர்கள் புறப்பட்டுவிடுவர்.

இந்தோனேஷியாவில் இப்பொழுதுள்ள 70 000 டச்சு துருப்புகள், கப்பல் வசதி கிடைத்தால் அடுத்த ஜூலைக்குள் வெளியேறிவிடும்.

பீகிங் மாநாடு

டாமஸ்கஸ் டிச. 22—

பீகிங்கில் நடைபெறவிருக்கும் ஆசிய நாடுகளின் மாதர் மாநாட்டில் கலந்து கொள்வதென்று சிரிய மாதர் லீக் முடிவு செய்திருக்கிறது.

இரு பிரதிநிதிகள் பீகிங்கிற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டதாகவும் தெரிகிறது.

தூத்துக்குடியில் நாடகங்கள்

24—12—49

தோழியர் மூவாலூர் ராமாமிர்தத்தம்மையார் அவர்கள் தலைமையில்

'சந்திரமோகன்'

o

25—12—49

தோழர் **வி. வி. ராமசாமி** அவர்கள் தலைமையில்

"நீதிதேவன் — — மயக்கம்"

ஆகிய இரு நாடகங்கள் நடைபெறும் நடிப்புப் புலவர் K. R. ராமசாமி, தோழர் C. N. அண்ணாதுரை மற்றும் பலர் நடிப்போர்கள்

o

விளம்பரம் :—

இராமலிங்கம்,
செயலாளர்,
ந. தி. மு. கழகம். தூத்துக்குடி

நாடகங்களுக்கு நன்கொடையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவார்கள். பொது விற்பனை கிடையாது.

இந்தியப் பகுத்தறிவாளர் கழகம் நிறுவனம்

—(0)—

சென்னையில் தலைமை நிலையம்

இந்தியப் பகுத்தறிவாளர் கழகத்தின் உறுப்பினர்கள் கூட்டமொன்று 19-12-49-ல் சென்னை பிராட்வே, 9 எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெற்றது. அதுபோது ஷ கழகத்திற்கு செயற்குழு அமைக்கப்பட்டது. செயற குழு விவரம் பின்வருமாறு:—

தலைவர்:—டாக்டர் ஆர். பி பராஞ்பிபே; துணைத் தலைவர்கள்:-பேராசிரியர் கே. டி. ஷா, எம். என். ராய். எஸ் இராமநாதன்.

செயலாளர் கள் : — எஸ். கோஷ், டி. எஸ். செல்வராஜ். பொருளாளர் :—ச. லாரன்ட

குழு உறுப்பினர்கள்:-கங்காராம் (அமிர்தசரஸ்) ஏ. எம். தர்மு (பெங்களூர்) சரதிண்டு நாராயின் ராவ (வங்காளம்) ஜி. இராமச்சந்திர ராவ் (விஜயவாடா) பி ஏ. வர்க்கி (கேரளம்) எம். சி. ஜோசப் (கொச்சி) சி என். அண்ணாதுரை (காஞ்சிபுரம்) பேராசிரியர் ஜெ பி. பாரெட்டோ (கோவா) டி. அஷிவத்தராவ் (ஓங்கோல்) அ. பொன்னம்பலம் (மதுரை) டபுள்யூ. பி. ஏ. செளந்திர பாண்டியன் (மதுரை) வி. வி இராமசாமி (விருதுநகர்) ஜடமணி மங்கராஜ் (ஓரிசா) ஏ. பாகுலியன் (சென்னை) உமார் காயா (மலபார்) க. அன்பழகன் (சென்னை) கா. அப்பாத்துரை (சென்னை) ஏ. கோபால கிருஷ்ணமூர்த்தி (தெனாலி) பி. பாலசுப்பிரமணியம் (சென்னை) சக்திபவாணி முத்து (சென்னை) எச் டி ராஜா (சென்னை) எம். சிபாவுதீன் (சென்னை) எம். வி. வி. கே. ரங்காச்சாரி (காக்கிநாடா)

மேலும் அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளவும், ஷ கழகத்தின் விதி முறைகளை வகுக்கவும் செயற்குழுவுக்கு உரிமையுண்டு. கழகத் தலைமை நிலையம் சென்னையிலேயே இருக்கும்.

இ. ப. கழக உறுப்பினர்களின் ஆண்டு சந்தா ரூ 3 கிளைக் கழகங்களும், மற்ற தனிப்பட்ட கழகங்களும் உறுப்பினர்களிடமிருந்து வசூலித்த தொகையில், கால் பகுதியைத் தம் சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளலாம் மீதி முக்கால் பகுதியைத் தலைமை நிலையத்திற்குச் செலுத்திவிடவேண்டும்.

இ ப. கழகத்தின் அடுத்து வரும் நடவடிக்கைகளுக்கும், பகுத்தறிவுப் பிரசாரத்திற்கென நடத்த இருக்கும் பத்திரிகைகளுக்குமென ஒரு நிதி திரட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

நாஸ்திகக் கொள்கையுடைய ஆசிரியர்களின் மேல் நடவடிக்கை எடுக்கும்படி சென்னை அரசாங்கக் கல்வி இலாகா சுற்றறிக்கை விடுத்திருப்பதை, ரத்து செய்யும்படி கோருவதென முடிவு செய்யப்பட்டது.

கழக நடவடிக்கைகள்

மாயவரம்:-இந்நகர் தி மு. க. கிளையின் உறுப்பினர்கள் 18-12-49-ல் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர்.

தீர்மானங்கள் 1 தோழர் கோ. செளந்தரராஜன் தன்னுடைய செயலாளர் பதவியை ராஜீனாமா செய்ததை ஒப்புக்கொள்ளப்பட்டது

(2) இதுவரை துணைச்செயலாளராகப் பணியாற்றி வந்த தோழர் நீ. ப. சாதன் அவர்களின் ராஜீனாமா கடிதம் படிக்கப்பட்டு, அதை யாரும் ஒப்புக்கொள்ளப் படட்டதோடு; அன்னாரின் சேவைக்கு செயற்குழு தன்பாராட்டுதலைத் தெரிவிக்கிறது.

(3) இதுவரை பணியாற்றி வந்த தற்காலிக செயற்குழு கலைக்கப்பட்டு, புதிய செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயற்குழுவிவரம்—:— செயலாளர் வை. மாணிக்கம் துணைச் செயலாளர்:—மா. சுந்தரமூர்த்தி, பொருள் உறுப்பினர் — ஆர். பழனிசாமி, விளம்பர உறுப்பினர்: கே. அருணசலம். ஏனைய செயற்குழுவினர்.—எஸ். செல்வராசு, இரா சி. வேல் முருகன், ஏ. கண்ணன், பி ஏ. சபாபதி, இரா. ராமானுஜம் என். சதாசிவம், என். எஸ். கணபதி. மேற்கொண்டு நான்கு பேர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு செயற்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

(4) 1950 ஜனவரியில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டன.

* * *

செங்கோட்டை:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழு கூட்டம், 15—12—49-ல் கூடியது. அதுபோது, துவக்கவிழாவின் வரவு செலவுக் கணக்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. பின் தி. மு. க. பொதுச் செயலாளரை அழைத்து ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. (வி-உ)

* * *

காரைக்குடி:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 18 12 49 அன்று "பாண்டியன் லாட்ஜ்" கட்டடத்தில் தோழர் அ. ச. நடராசன் தலைமையில் கூடியது. அதுபோது பொதுச் செயலாளரை அழைத்து துவக்கவிழாவை நடத்துவதென்றும், ஷ விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஒரு செயற்குழுவைத் தேர்ந்தெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. (மு-செ)

* * *

பலராமபுரம் (தென் திருவிதாங்கூர்):—இவ்வூர் தி. மு. க. கிளையின் அங்கத்தினர் கூட்டம், 16—12—49 ல் கூடியது. அதுபோது, துவக்க விழாவின் வரவு செலவு கணக்கும் பார்க்கப்பட்டது. பின் இதுவரை பணியாற்றிவந்த செயற்குழு கலைக்கப்பட்டு புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- ஆ. அருணாசலம்; பொருள்உறுப்பினர்:- மா. கணேசன்; விளம்பர உறுப்பினர்:- ராமநாதன்; ஏனைய குழுவினர்:- ராமசாமி, சா. ம. சீனிவாசன்.

பின்பு, நாகர்கோவிலுக்கு வரும் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களைக் கொண்டு பலராமபுரத்திலும் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. திருவாங்கூருக்கு வரும் வெளியூர் பேச்சாளர்கள் பலராமபுரத்திற்கும் வந்து பேச வேண்டுமாய் கேட்டுக்கொண்டு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (செ-ர்)

* * *

குளூர்:- இவ்வூர் கிளையின் சார்பில் 11-12-49-ல் தோழர் எஸ். ஏ சாச்சிமுத்து தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. "கடவுள்" என்பதைப்பற்றி பலர் சொற்பொழிவாற்றினர். அடுத்த சொற்பயிற்சிக்கூட்டம், 18-12-49ல் தோழர் இராசசாமி தலைமையில் கூடியது. அதுபோது 'சுதந்திரம்" என்பது பற்றி பலர் சொற்பொழிவாற்றினர்.

* * *

சென்னை:- அம்மன்கோயில் (10-வது வட்டம்) தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 8-12-49-ல் நடைபெற்றது. அதுபோது, தோழமைக் கழகம் அம்மன்கோயில் தி. மு. க. கிளையுடன் இணைந்து விட்டதால் கீழ்க்கண்டவாறு செயற்குழு திருத்தியமைக்கப்பட்டது.

செயலாளர்:- சத்தியவாணி முத்து; துணைச்செயலாளர்:- வி. மோகனரங்கம்; நிதிஉறுப்பினர்:- பி. எஸ். மாரியப்பன்; விளம்பர உறுப்பினர்:- டி. இராமானுஜம். ஏனைய செயற்குழுவினர்:- ஏ. ஆர். சேஷாசலம், எஸ்: கஜபதி, ஆர். முத்துக்கிருஷ்ணன், கே. திருவேங்கடம், பி. எம். ஏகாம்பரம், ஜி. சேகரம்.

சென்னை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் ஏ. ஆர். சேஷாசலம் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

கனியூர்:- இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 13—12—49ல் தோழர் கே. ஏ. முருகேசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, 2—12—49ல் நடைபெற்ற துவக்க விழாவின் வரவு செலவுக்கணக்கு பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்பு, கோவையில் நடைபெற இருக்கும் மாவட்டக்கழகக்கூட்டத்தின் முடிவுபடி மாநாடு பற்றிய நடவடிக்கைகளைத் துவக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தோழர்கள் சி. வி. நாகப்பன், சாத்தொழுவு டி. முத்து, எம். சின்னப்பா, ஆகியோர் செயற்குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பிறகு சென்னை அரசாங்கம், மிதமிஞ்சிய வருமானமுடையவர்களிடம் வசூலிக்க முயற்சிக்காமல் ஏழைக்குடியானவர்களைப் பாதிக்கும் முறையில் இரட்டிப்பு நிலவரியாகவசூலிக்க முன்வந்திருப்பதைக் கண்டிப்பதும், தென்னாட்டின் தட்பவெப்ப நிலைமைக்கேற்றதான சித்த வைத்தியத்தைப் புறக்கணித்துயுனானிக்கும், ஆயுர் வேதத்திற்கும் இந்திய அரசியலாரால் நியமிக்கப்பட்ட சோபர் கமிட்டியார் இடமளித்திருப்பதைக் கண்டித்தும், மேனாட்டு மருத்துவ முறையையும் சித்த வைத்திய முறையையும் இணைத்து ஒரு மருத்துவ முறை தயாரிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக கழகத் துவக்க விழாவிற்கான செலவில் பெரும் பகுதியை தன் சொந்தப் பொறுப்பில் ஏற்று நடத்தித்தந்த கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. என். ஏ. முத்துவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

பிரிட்டிஷ் கப்பல் முடக்கப்பட்டது

ஹாங்காங், டிச. 22—

கம்யூனிஸ்டுகளின் கொடியைப் பறக்கவிடாமல் வேறு சிவப்புக் கொடியைப் பறக்க விட்டதற்காக பிரிட்டிஷ் கப்பல் 'வின்சேன்' னை சீன கம்யூனிஸ்டுகள் ஸவாடோ என்ற இடத்தில் டிசம்பர் 10-ந் தேதி முதல் மடக்கியிருக்கின்றனர் என்று செய்தி கிடைத்திருக்கிறது.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

களம்பூர்

களம்பூர் டிச. 19—

இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பாக 17-12-49 மாலை 6-மணிக்குத் தோழர் எம். எஸ். கே. பழனிவேலு ரைஸ் மில்லுக்கருகிலுள்ள மைதானத்தில், ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர் தெ. கோ. தங்கவேலு தலைமை தாங்கி பேசியதின் சுருக்கமாவது;-

காங்கிரஸ் சர்க்கார் இதுவரை பாட்டாளி மக்களுக்காகச் செய்த நன்மைகள் என்ன? நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாமல் இருக்கின்றனரா? மேலும் மேலும் பாட்டாளிகளைப் பாதிக்கும் பல வரிகளைச் சுமத்தி, முதலாளிகளைக் கொழுக்க வைக்கின்றனர். வெள்ளையன் ஆட்சி காலத்திலாவது அவன் விட்டுச் செல்லும்போது பல கோடி ரூபாய்கள் மிச்சம் செய்து வைத்தனரே, அதாவது ரிசர்வ் பேங்கி ஏறத் 310 தாம் கோடி, மாகாண சர்க்கார் சேமிப்பு நிதி ரூ. 55 கோடி இருந்ததே. காங்கிரஸ் ஆட்சி வந்த பின், ரிசர்வ் பேங்கிலிருந்து ரூ 210 கோடியும், மாகாண சேமிப்பு நிதியிலிருந்து ரூ. 33 கோடியும் சர்வதேச பேங்கிலிருந்து ரூ. 32 கோடி கடன் வாங்கி சில விட்டதுமல்லாமல், செலவாணி பேங்கிலிருந்து ரூ 400 கோடியும் சிலவழித்து விட்டனர். போதாதென்று விவசாயிகள் ரூ. 10-க்கு மேல் வரி கட்டுவதாக இருந்தால் அவ்வளவு தொகையையும் சேர்த்து கட்டாயமாக செலுத்த வேண்டுமாம். எதற்காக இவ்வளவ பணம் என்று கேட்டால், எங்கள் பேரில் அடக்குமுறை வீசப்படுகிறது. இது முறையா? எனக் கூறிமுடித்தார்.

அடுத்துத் தோழர் ச. மொ. அண்ணாமலை அவர்கள் பேசினார்.

அடுத்த படியாக திருவத்திபுரம் புலவர் கோவிந்தனார் பி. ஓ. எல். அவர்கள் பேசினார்:—

"காங்கிரஸ் சர்க்கார் ஆட்சிக்கு வந்து ஈராண்டுகளுக்கு மேலாகிறது. ஆட்சிக்கு வருமுன், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிகளே விதிக்க மாட்டோம், நாடு நலமடையும், ஆற்றல் வெள்ளம் புரண்டோடும், எங்கும் மழை பெய்யும், எல்லோரையும் படிக்கும்படி செய்வோம். பாட்டாளி மக்களைப் பட்டினியுடன் வதைக்க மாட்டோம் என்று குரல் கிழியக்கத்தினர். இதுவரை நடந்ததென்ன? இனியாகிலும் நடப்பதற்குத் திட்டமுண்டா? மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் மகா மோசம். கள் ஒழிந்தபின் கள்ளைக் குடிக்காதே என்ற பிரச்சாரம்! பாதுகாப்புச் சட்டம் இயற்றியுள்ளனர். எந்த ஆளின்மீதாவது சந்தேகம் ஏற்படின் விசாரணையின்றி காவலில் வைக்கலாம். அப்பீல் செய்து கொள்ளவும் உரிமையில்லை, இதற்குப் பெயர் பொதுமக்கள் சர்க்கார்!

நெசவாளர்கள் மிகவும் துன்பப்படுகின்றனர். காரணம், துணிகள் விற்பனையாகவில்லை. நெசவாளர்களின் பட்டினிக் கூச்சலை, அழுகுரலை அரசியலார் அசட்டை செய்துவருகின்றனர். இந்நிலை நீடிக்குமாயின் ஒவ்வொரு நெசவாளியும் கிளர்ச்சிக்காரராக மாறுவது நிச்சயம்." என்று பல ஆதாரங்களுடன் விளக்கி, உணர்ச்சி ததும்பப் பேசினார்.

தலைவர்முடிவுரைக்குப்பின், தோழர் ர. கணேசன் நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் வி. எஸ். சின்னகண்ணு, எ. கோவிந்தசாமி இவர்கள் திராவிடப்பண்பாடினர்.

இக்கூட்டத்தை நடத்த பாடுபட்ட "மாலை மணி" ஏஜண்ட் தோழர் கே. பி. கண்ணன் அவர்களின் பெருமுயற்சி பாராட்டத்தக்கது (வி-உ)

சென்னை-கிருஷ்ணம்பேட்டை

சென்னை, டிச. 18—

கிருஷ்ணம்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழா 4-12-49 ஞாயிறு அன்று மாலை 6-மணிக்கு மேல் அமில்டன் வாராவதி சாலையிலுள்ள கழகக் கட்டிடத்திற் கெதிரிலுள்ள மைதானத்தில், அலங்கரிக்க பட்ட பந்தலில், சிறப்புற நடந்தேறியது. சென்னையில் பல பகுதிகளிலிருந்து ஏராளமான தோழர்கள் வந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். கழகத் தோழர் நாட்டுப் பண் பாடிய பின், விழாவுக்கு அறிஞர் கா. அப்பாதுரையவர்கள் தலைமை தாங்கினர்.

சி. பி. சிற்றரசு

அடுத்து தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், தற்கால அரசியல் நிலையைப் பற்றியும், அரசினர், மதுக் கடைகளை மூடிவிட்ட பிறகு, அரசினர் மதுவிலக்குப் பிரசாரம் செய்ய ஆட்களை நியமித்து பொதுமக்களின் வரிப் பணத்தை வீண் விரயம் செய்யப்படுவதையும், கண்டித்து, சுமார் 1½ மணி நேரம் அழகாகப் பேசினார்.

என். வி. நடராசன்

பிறகு தோழர் என். வி. நடராசன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளைப் பற்றியும், வருங் காலத்தில், கழகம் ஆற்ற இருக்கிற பணிகளைப்பற்றியும் மிகவும் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினர்.

க. அன்பழகன்

அடுத்துத் தோழர் க. அன்பழகன் அவர்கள் இன்றைய காங்கிரஸ் சர்க்கார் தங்களுடைய ஆட்சியை மதச்சார்பற்றதுஎன்றுகூறிக்கொண்டு, அதற்கு முரணாகத் தபால் பில்லைகளில் இந்துமதச் சின்னங்களான, மும்மூர்த்திகளையும், மற்ற இந்துமதக் கடவுள்களையும் பொறித்திருப்பதையும், மேலும் சர்க்கார் பகுத்தறிவு நூல்களையும், நாடகங்களையும் தடை செய்வதைக் காரசாரமாகக் கண்டித்து பேசினார். பிறகு, கழகச் செயலாளர் மா. ஆதிமூலம் நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது. (வி-உ)

விருதுநகரில் 'சந்திரமோகன்' இரண்டு நாள் நடத்த முடிவு

விருதுநகரில் நாடகம் பார்க்க அதிக தோழர்கள் விருப்பமுள்ளவர்களாக இருப்பதால், அனைவருடைய ஆவலையும் நிறைவேற்றும்பொருட்டு

26 & 27—12—49 திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும், சென்ட்ரல் சினிமாவில்,

"சந்திரமோகன்"

நாடகம் இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

இரண்டு நாட்களிலும்

தோழர் அண்ணாதுரையும் கே. ஆர். ராமசாமியும் நடிப்பார்கள்.

இரண்டு நாடகத்திற்கும் முறையே

[illegible] ஊ. பு. அ.

சவுந்திர பாண்டியனார்

கே. கே. நீலமேகம்

ஆகியோர் தலைமை வகிப்பார்கள்

அளவுக்கு ஏற்றபடி தான் டிக்கட் கொடுக்க இயலும். எனவே முன் கூட்டியோ நேரிலோ, அல்லதுதபால் மூலமோ பணம் செலுத்தி டிக்கட் பெற்றுக்கொள்ளவும்.

டிக்கட் வரியுள்பட ரூ. 5, 3, 2.

இங்ஙனம்

தி. மு. கழகத்தார்

விருதுநகர்

பணம் செலுத்தி டிக்கட் பெறும் முகவரி:

கே. எஸ். எஸ். அய்யாசாமி,

பொருளாளர் தி. மு. கழகம்

எவரெஸ்ட் சுருட்டு கம்பெனி

விருதுநகர்.

வீரசோழம்

வீரசோழம, டிச. 17—

16—12—49 மாலை 4-30 மணிக்கு வீரசோழம் கிளை, திராவிட முன்னேற்ற கழகக் கொடி ஏற்று விழா நடந்தது கூட்டத்திற்கு டி. எ. எம, முகம்மது யூசுப் தலைமை வகித்தார். கே. எம். கோஸ் முஹம்மது முன்னேற்றக் கொடியை ஏற்றிவைத்தார்கள். அவ்வமயம் தோழர்கள் பி. கே. எஸ். காட்டுவாமுகையதீன், வி. எஸ். எம் முகம்மது இஸ்மாயில்ஆகியோர்கள் கழககொள்கைகளைப்பற்றியும் இனி நாம் செய்ய வேண்டிய சேவைகளைப்பற்றியும் பேசினார்கள் திராவிடம் பள்ளி மாணவர்களும் பேசினதின் பிறகு, தலைவர் பின்னுரைக்கு பின், கூட்டம் து. சிவசாமி நன்றி கூறலுடன் இனிது முடிவுற்றது.

★ நாட்டு நடப்பு ★

தமிழ் இல்லம்

கோவை, டிச. 7—

நேற்று மாலை கழகத் தலைவர் தோழர் ச. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் முழு மனதுடன் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்:—தோழர் எஸ். பி. ஆதித்தன் அவர்களால் மேல்சபையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பலவிகிதக்கு மசோதாவை இக் கழகத்தார் ஆதரிப்பதுடன், அம் மசோதாவை உடனடியாக சட்டமாக்க வேண்டுமென்றும் இக் கழகத்தார் சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறார்கள்.

* * *

சி. எம். யு. தொழிலாளர் மாநாடு

9-12-49 வெள்ளிக்கிழமை தெ. இ. ரயில்வேயில் வேலை பார்க்கும் மாஜி 2 சி. எம். யு. தொழிலாளர்கள் ஓர்க்கர்ஸ் யூனியன் திருச்சி கிளை அபீஸில் தோழர் கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கூடி தங்களது குறைகளை எடுத்துக் காட்ட வருகிற ஜனவரியில் திருச்சியில் மாநாடு நடத்துவதென முடிவு செய்து, கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்களைக் கொண்ட வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது.

வரவேற்பு குழுத் தலைவர்:— எஸ். புருஷோத்தமன், கூட்டு செயலாளர்கள்:— பி. அங்குசாமி, வி. சமீராநாராயணன். பொருளாளர்: எல். ராமநாதன், மற்றும் கமிட்டி அங்கத்தினர்கள் 12 பேர். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

• • •

தமிழர் கழகம்

ஆத்தூருப்பம், டிச. 14—

இவ்வூர் தமிழர் கழகத்தின் பொதுக்கூட்டம் ஒன்று, 4-12-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் சே. ரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருத்தணி தாலுகாவை உடனடியாக சித்தூரிலிருந்து பிரித்து, வடஆர்க்காடுடன் இணைக்க, ஒவ்வொரு கிராமத்திலும் பிரசாரம் செய்ய, தோழர்கள் சந்திரசேகர செட்டியார் சுப்பிரமணிய (பிள்ளை,) முனுசாமி (செட்டியார்,) சுவாமிநாதன், பார்த்தசாரதி (செட்டி) ஆகியவர்களைக் கொண்ட பிரச்சாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. தமிழ் தின வார, மாத இதழ்களை வரவழைத்து தமிழ் மக்கள் படிப்பதற்கு வசதி செய்ய வேண்டி "சாந்தியடிகள் வாசகசாலை" என்ற பெயரிலே ஒரு வாசகசாலை 18-12-49-ல் திறக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்ப் பிள்ளைகள் அனைவரும், தமிழ்ப் படிப்பதற்காக "வள்ளுவனார் தமிழ்ப் படிப்பகம்" என்ற பெயரிலே ஒரு இரவு பாடசாலை 18-12-49-ல் திறக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. 1911-க்கு முன்இருந்ததுபோலவே மீண்டும், சித்தூரிலுள்ள எல்லாத் தமிழ்த் தாலுக்காக்களையும்உடனடியாகப் பிரித்து, வடஆர்க்காடுடன் இணைக்க வேண்டுமென்ற தீர்மானமொன்றை, வடஆர்க்காடு ஜில்லா போர்டார் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

* * *

கிராம முன்னேற்ற சங்க ஆண்டு விழா

சிவதாபுரம், டிச. 18—

சேலம் தாலுக்கா சிவதாபுரம் கிராம முன்னேற்ற சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா சங்கக் கட்டிடத்தின் முன் அமைத்திருந்த திருவள்ளுவர் பந்தலில் 12-12-49ந் தேதி சூரமங்கலம் பஞ்சாயத்து போர்டு தலைவர் டாக்டர் எம். ஈமனி வாயம் எல். ஐ. எம். அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

சேலம் டாக்டர் கே. ஆர். கோபால் திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைத்தார்.

அவ்வமயம் பாகல்பட்டி பா. வே. பொன்னுசாமி அவர்கள் சங்கத்தின் திருவள்ளுவர் நூல்நிலையத்தையும், இலவச வாசகசாலையையும் திறந்துவைத்து திருக்குறளைப் பற்றி பேசினர்.

செயலாளர் சங்கத்தின் ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

சங்கத் தலைவர் தோழர் சி. சித்தையன் அவர்களின் சேவையைப் பற்றி கிராம மக்களால் வாழ்த்திதழ் ஒன்று படித்தளிக்கப்பட்டது.

மாணவ, மாணவிகள் விளையாட்டுடன் சேலம் தோழர் எ. வி. ராமசாமி, சதாசிவம், திருமலைய்யா, சுப்பராயன் ஆகியோர்களில் பளு தூக்குதல் (Weight Lifting) தசைஅடக்கம் (Musles Control) திறமையாகச் செய்து காண்பிக்கப்பட்டது.

அடுத்தாற்போல் சேலம் ஜில்லா விசேஷ அபிவிருத்தி இலாக்கா (District Development) அதிகாரி ஜனாப் அப்துல் ஹமீது அவர்கள் கிராம முன்னேற்றம் குறித்து விரிவாகப் பேசி, போட்டி விளையாட்டுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினர்.

அப்போது கிராமப் பொது மக்களால் கிராமக் குறைபாடுகள் குறித்து பல விஷயங்கள் அடங்கிய மகஜர் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதைத் தலைவர் பின்னுரைக்குப் பின் நன்றிகூறலுடன் இரவு 8-மணிக்கு இனிது முடிந்தது.

• • •

பகுத்தறிவு வாசகசாலை

அம்மாப்பேட்டை, டிச. 11—

11—12—49-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு சேலம் அம்மாப்பேட்டையின் ரோடு பகுத்தறிவு வாசகசாலையின் செயற்குழுக் கூட்டம் தி. மு. கழகக் கட்டிடத்தில் எம். பி. வள்ளியப்பன் அவர்கள் தலைமையில் கூடியது.

அது சமயம் அதன் வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு பகுத்தறிவு வாசகசாலையை தி. மு. கழகத்தின் நிர்வாகத்தில் இணைத்துவிடுவதென்று ஏகமனதாகத் தீர்மானித்து அதன் நிர்வாகக் கமிட்டி கலைத்துவிடப்பட்டது இரவு எட்டு மணிக்கு செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

* * *

மருத்துவர் கழகம்

மேட்டூர் அணை, மருத்துவ மூடி திருத்த நிலைய மைதானத்தில் 14-10-49-ம் தேதி தோழர் எ. கவுனியண்டிதர் தலைமையில், "மேட்டூர் அணை மருத்துவகுல கழகம்" நிறுவப்பெற்று, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்:- தோழர் ஆர். பி. வீராசாமி; (செயற்குழு உறுப்பினர் தி. மு. க. கிளை மேட்டூர் அணை.)

துணைத்தலைவர்:- எஸ். டி. வீரமுத்து, செயலாளர்:- டி. பி. நாராயணன், உதவிச்செயலாளர்:-சே. முருகேசன், பொருள் உறுப்பினர்:- எஸ். எஸ். குப்புசாமி, ஏனைய செயற்குழுவினர்:- தோழர்கள் என். ஐயப்பன், எ. கவுணிமருத்துவர், சே. காளிமுத்து, எஸ். வி. குப்புசாமி, என். சே. பழனி, எஸ். என். பழனி, எம். இ. இருசன், சே. எம் இரங்கசாமி, எ. சே. மாரி.

பாயிட்-ஆர் உலகக் குடியானர்

பாரிஸ், டிச. 21—

பாயிட்-ஆர் உலகக் குடிகளில் ஒருவராகச் சேர்ந்திருக்கிறார். இந்த இயக்கத்தை முதன் முதலில் ஆரம்பித்தவர் தோழர் கேரி டேவிஸ் ஆவார். (ரூட்டர்)

மாபெருந் தலைவன்--பேராசான்--மட்டிலார்வப் புரட்சி வீரன்

பாரிஸ் முதல் பீபிங் வரை மக்கள் தலைவர்கள் மாஸ்கோவில் திரண்டனர்

"அமைதிகாவலன் ஆண்டுபல வாழ்க"

உலககம்யூனிஸ்டுகளின்ஒப்பற்றதந்தை பிறந்தநாளன்றுபூரிப்பும்-பெருமையும்

உலகங் கண்டிரா ஒப்பற்ற விஞ்ஞானி. அரசியல் மதியூகி, இனசவிற்பன்னர், ஆசிரியர், தலைவர்—ஜெர்மனியையும் ஜப்பானையும்முறியடித்துவீழ்த்திய சமாதான பாதுகாவ காவலர், அமைதி விழையும் மக்கள் தலைவர் எனறெல லாம பலபபடப பாராட்டப்பெறருா தளபதி ஸ்டாலின கடந்த புதனன்று. ஏழ்மையில் நெளிந்த, ஜார்ஜ்ஜியா செருப்புத் தைக்கும் தொழிலாளரொருவரின தோலை லாக வுதித்து, பாதிரிப படிப்புமாணவராக வாழவைத் தவககி, நாளாவட்டத்தில் பிறவிப் புரட்சியாளராக மாறி, இன்று கோடிககணக்கான உலக மககளின உன னதத் தலைவராகப் போறறிப் புகழப்படும ஜோசப ஸ்டாலினவர்களின 70-வது பிறநதநாள விழா சோவ யத் மாஸ்கோவில கணகொள்ளாககாட்சியாகவிருந்தது.

பாரிஸ் முதல் பீபிங் வரையில் கம்யூனிஸ்ட் நாடுகளுடை, கம்யூனிஸ்ட இயககங்களுடை, கம்யூனிஸ்ட் கோட்பாடு கள் கொண்ட மககளுடை எதிர்காலததை நிர்ணயிக்கக கூடிய எண்ணிறாத தலைவர்கள அன்று மாஸ்கோவில திரண்டனா, உலகக் கம்யூனிஸட தலைவருக்கு அன்பு மரியாதை, செலுத்த. 'மாபெருந் தலைவன, பேராசான், லெனினின் அழியாக கோட்பாட்டை உலகிடை நிறுவ வந்த உத்தமன' என்று பெருமிததுடன பாராட டெடுத்தது ரஷ்யக் கம்யூனிஸ்டு கடசியின் மத்திய கமிட்டி.

லெனின் மறைவுக்குப் பின் னர் பேரிட பற்பல சம வங்களுக்கும் ஸடாலினவா களின் பேராற்றலை வியந்து பாராட்டி, புகழ்மாலை சூட்டி யது சோவியத் சோஷலிஸ குடியரசு யூனியன் சுப்ரீம சோவியத் தலைமை நிலையம.

புகழ் மணக்கும் எழுபதா வது ஆண்டு, பிறந்தநாள்

பாராட்டுச் செய்தியாக மேற் படி தலைமை நிலையம் அனுப்பி வைத்திருந்த நீண்ட தொரு இதழில், ஜார் வீழ்ச்சிக்கு பிறகு வந்துற்ற அரசியல், பொருளியல், இராணுவ நட வடிக்கை ஒவ்வொன்றுக்கும் ஸ்டாலினுக்கு மரியாதை செலுத்தியதோடு, லெனின் வாழ் நாளில் நடந்த பற்பல நிகழ்ச்சிகளிலும் ஸ்டாலினே மதிப்புக்குரிய பொறுப்பாள யெனப் பாராட்டியது.

தங்கள் தங்கள் நாடுகளில முழு அதிகாரம் செலுத்தி அரசோச்சும் ஆ வர் பெண டிர் பற்பலர் அன்று கிரமலின வந்து குழுமியிருந்தனா. ஹங கேரியைச சேர்ந்த மத்யாஸ்

ராககோஸி, 40 கோடி சீன மக்களின பெருந் தலைவா மாசேதுங், ருமேனிய அன்னா பாக்கரும ஜியா ஜிசியாகு வும், இத்தலி தொகலியாட்டி யுனனும பற்பலர் வந்து திரண்டிருந்தனா.

பிரிட்டனிலிருந்து பிரதமா அட்லி தனது பாராட்டு செய்தியொன்றை அனுப்பி வைததிருந்தார். ஐரோப்பா வில கொண்டாட்டமும் ஆர்ட பாட்டமும் பலப்பட இருந்த தாகத் தகவல்கள் கூறுகின் றன. பல்கேரியா, ஹங்கேரி ருமேனியா, செகோஸ்லோ வேக்யா, சீனா, ஜெர்மனி, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, யு. எஸ். இங்ஙனமான நாடு களில பிறந்த நாள விழா பெருமை-பூரிப்புடன் கொண் டாடப்பட்டிருக்கிறது.

கோவை நகர தி. மு. க. தோழர்களுக்கு: அறிவிப்பு

25-12-49 ஞாயிற்றுக்கிழமை காலை 5-மணிக்கு கோவை நகர கழகக் கட்டிடத்தில், கோவை நகர சுற்றுவட்ட தி. மு. க. கிளைகளின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கிளைக்கழகங்கள் இல்லாத வார்டு களில் உள்ள கழக முக்கியத் தோழர்கள் அனைவருமடங்கிய ஓர் கூட்டம் நடைபெறும். அதசம யம் நகரின் பல பகுதிகளிலும் பொங்கல் விழாக் கூட்டங்கள் நடத்தவும், உறுப்பினர்களை முன் னமேச் சேர்ப்பது முதலியவை களைப்பற்றி யோசித்து முடிவு செய்யப்பட வேண்டியிருப்பதால், மேற்கண்ட தோழர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு தவறாமல்வரு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

S. A. ராஜமாணிக்கம்
செயலாளன்
நகர தி. மு. கழகம் கோவை

பொதுக்கூட்டம்

சென்னை, பிரம்பூர் தி. மு. க. கிளையின் துவக்கவிழாப் பொதுக்கூட்டம், 24-12-49 சனி மாலை 5 மணிக்கு, பிரம் பூர் ஏரி மைதானத்தில நடை பெறும்.

அதுபோது, 'தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ; இரெ. இளமவழுதி பி. ஏ; காஞ்சி, மணிமொழி யார் ஆகியோர சொற்பொழி வாற்றுவர்.

இனி நடப்பவை

பொள்ளாச்சி :—இவ்வூர் திரா விட முன்னேற்ற வாலிபர் கழகச சார்பில 25-12-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு இவ்வூர் தேர் நிலை யினில் ஓர் பொதுக் கூட்டம நடைபெறும். அதுபோது தோழர் கோ. கோபால் தலைமையில் தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. வி. எம். சாமி ஆகியோர் சொற்பொழி வாற்றுவார்.

* * *

கோவை :—இக்கர திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் சார்பில் 25—12—49 ஞாயிறு காலை 10 மணிக்கு கழகக் கட்டி டத்தில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். அதுபோது, புலவர் சந்திராசன் அவர்கள் தலைமையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் பயிற்சிக் கூட்டத்தைத் துவக்கி வைப்பார்கள். மற்றும் பல மாண வத் தோழர்கள் சொற்பொழி வாற்றுவர்.

* * *

சென்னை:- முத்தியாலுபேட்டை கா ராமசாமி நாயக்கன் தெரு, 6 என் னுள்ள கட்டிடத்தில் 24-12-49 அன்று தோழர் வி. பி. முருகை யன் தலைமையில் தாழ்த்தப் பட்டோர் முன்னேற்றக் கழக ஆரம்பவிழா நடை பெறும். தோழர் கள ஜி. ஜான், எ. ஜார்ஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கொமரலிங்கம்:—இவ்வூர் தி மு க. கிளையின் துவக்க விழா, 24—12—49 மாலை 6 மணிக்கு நடைபெறும். அதுபோது, தோழர் கள் கோபி. ஜி. என். இராஜு, நாவரமணி, தங்கவேலு, அ தமிழரசு ஆகியோர் சொற்பொழி வாற்றுவர்.

* * *

பேரளம்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்கவிழாப் பொதுக் கூட்டம், 25—12—49 அன்று பேரளத்தையடுத்த சொல்லுமாங் குடியில் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரெ. இளம்வழுதி பி.ஏ., தில்லை வில்லாளன், பி.எஸ் இளங்கோ, ப. சு. கணபதி ஆகி யோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருச்செங்கோடு:- இவ்வூர் தி. மு. க. கிளையின் சொற்பயிற்சிக் கூட்டம், வழக்கம்போல் கழகக் கட்டிடத்தில் 25-12-49 ஞாயிறு காலை நடைபெறும். "மக்களாட் சிமை" என்பது பற்றி பலர் பேசுவார்கள்.

* * *

சென்னை:- திருவல்லிக்கேணி தி. மு. க. கட்டிடத்தில் (15, பெரு மாள் நாயக்கன் தெரு) 25-12-49 ஞாயிறு காலை 10 மணிக்கு, தோழர் வஜ்ரவேல் தலைமையில் தோழர் கள், மு. கணேசன் "தமிழ்நாடா? திராவிட நாடா?" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற் றுவார்.

போகிற போக்கில்...!

கங்கை கொண்டானி லுள்ள பிரசித்தி பெற்ற கைலா நாதசுவாமி கோயிலுள் திருடர் புகுந்து துணிகரமான முறையில் களவு செய்திருப்ப தாகத் தகவல் கிடைத்திருக் கிறது.

—செய்தி

இச்சம்பவத்தால் கைலாச நாதசுவாமி கோவில் மேலும் அதிகமாகப் பிரசித்தி பெறுகிற தென்கிறார் சத்வ்ஷய விசாசக ரொருவர்! இரவு வேளையி கல்முதலாளி சயனித்திருக்கும் கோட்டைச் சுவற்றை ஏறிக்குதிக்கத் துணிகரம் ஒன்றும் தேவையில்லையோ எனக் கிண்டல் செய்கிறார் ஒரு நித்திய தரித்திரர்! இப் மண்ணுலக வாழ்வையே ஒரு பொருட்டாய் மதித்து, பரத்தை பலியிட தயங்காத அபடாபியின் செயல் துணி கரம் வாய்ந்ததுதானென்கிறா ஒரு பரம சாது!

* * *

"உலக சமாதானத்திற்காக ஜப்பானிலிருந்து வந்துள்ள பிரதிநிதி சேவாசிரமத்தில் ஒருவார உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்"

—செய்தி

அகில உலகிலும் சமாதா னம் தழைய, அடிவயிற்றில அமைதி யாகத்தை மறந்து துணிந்த இவ்வாளரின் கருணையே கருணை!

* * *

'பம்பாய் பிரதமர் பி. ஜி. கெர் மாதத்திற்கு இரண்டு நாட்கள் உபவாசமிருக்கிறார்!

—செய்தி.

பகல் பட்டினி பலராமன் மாதத்துக்கு இரண்டு நாட்கள் உண்ணாவிரதம் பூண்டிருக் கிறாரென்று 'பெருமை'பட்டு கிறார் 'ராப்பட்டினி' ராம துரை!

* * *

'ஸ்பிரிட்' குடிப்பதைத் தடுக்க வழி: சென்னை சர்க் கார் யோசனை'

—செய்தித்தலைப்பு

'ஸ்பிரிட்' விலைகொடு பிரசா ரகர்கள் என்று 411 பேரை நியமிப்பது அறிவுடைமை யாகும்!

* * *

'ஜனங்கள் சரியாயிருந்தால் தான் சர்க்காரும் சரியாய் நடக்க முடியும்'

—சி. ஆர்.

சரியான மக்கள் மட்டுமே சரியான சர்க்காரைத் தேர்ந் தெடுக்க முடியுமென்கிறார், ஒரு குதர்க்கவாதி!

அஸ்ஸாம் எல்லை பாதுகாப்பு "மூடுமந்திரம்!"

அஸ்ஸாமின் பாதுகாப்பை பலப்படுத்த, பர்மா-பாகிஸ்தான எல்லைகளில சர்க்கார் மேற் கொண்டிருக்கும் நடவடிக்கை களென்னவென்று மத்திய சட்டசபையில் யோசித்து ஒருவர் ஜி ரங்கா கேட்ட கேள்வி யொன்றுக்குப் பதிலளித்த சர்தார் படேல், இது விஷயத்தில் சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வெளியிடுவது பொதுநலத்துக்கு உகந்ததல்ல தென்றும், தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன வென்றுமட்டுமே குறிப்பிட ஆசைப்படுகிறேன் என்றும் தெரி வித்தார்.

அரபு நாடுகளுக்கு பொது கரன்ஸி

பாக்தாத், டிச. 22—

அரபு நாடுகள் எல்லாவற்றிலும் ஒரேமாதிரியான பொது நாணய முறையை ஏற்படுத்துவது சம்பந்த மாக ஆலோசிக்க அரபு கமிட்டியை காரியதரிசி அஸ்ஸாம் பாஷா கூட் டப்போகிறார். இதற்கான அமைப்பு எல்லா அரபு லீக் மெம் பர் நாடுகளுக்கும் அனுப்பப்பட்டி ருப்பதாகத் தெரிகிறது

அரசியலமைப்பு சபை

இந்திய அரசியலமைப்பு சபை யின் அடுத்த கூட்டம், 1950 ஜனவரி 24-ந்தேதி ஆரம்பமாகு மென்றும், சர்க்கார் கூட்டத் தில் இந்தியத் தலைவர் தேர்த லை நடைபெறுமென்றும் தெரி கிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

24—12—49

பிரம்பூர்:—(சென்னை)	இரா. நெடுஞ்செழியன், இரெ. இளம் வழுதி, காஞ்சி மணிமொழியார்
கொமரலிங்கம் :—	ஜி.என். இராஜு, நாவரமணி அ. தமிழரசு, தங்கவேலு
அழகனுபுரம் (நாஞ்சில்) :—	டி. கே. சீனிவாசன்,

25—12—49

பொள்ளாச்சி :—	மு. கருணாநிதி, கோ கோ. பால், ஏ. வி. எம். சாமி.
திருவனந்தபுரம்: —	டி. கே. சீனிவாசன்.
பேரளம் :—	இரெ. இளம்வழுதி, தில்லை வில்லாளன், ப. சு. கணபதி. பி. எஸ். இளங்கோ

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

1-1-1950 ஞாயிறு காலை 8-மணிக்கு

ஆசிரியர் வேலாயுதம் பந்தலில்
(திருச்சி முருகன் டாக்கீசுக்கு அருகில்)

நடைபெறும்

தலைவர் :

தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள்

(நகரசபைத் தலைவர், கோவில்பட்டி)

துவக்கிவைப்பவர் :

தோழர் P. பழனிச்சாமி அவர்கள்

(பெத்தாம்பாளையம்)

தோழர்கள் :

C. N. அண்ணாத்துரை M. A.	E. V. K. சம்பத்
இரா. நெடுஞ்செழியன் M. A.	K. V. K. சாமி
க. அன்பழகன் M. A.	K. K. நீலமேகம்
இரெ. இளம்வழுதி M. A.	M. S. இராமசாமி
பூ. கணேசன் M. A.	A. V. P. ஆசைத்தம்பி
மா. இளஞ்செழியன் B.A. (HONS)	S. முத்து
K. A. மதியழகன் B. A.	இரா. சு. தங்கப்பழம்
N. V. நடராசன்	மு. கருணாநிதி
A. சித்தையன்	T. K. சீனிவாசன்
C. P. சிற்றரசு	M. S. சிவசாமி
காஞ்சி. மணிமொழியார்	காஞ்சி. கல்யாணசுந்தரம்

தோழியர் மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார்,
சென்னை சத்தியவாணிமுத்து

மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்

இரவு 9-30 மணிக்கு

தோழர்கள் :

C. N. அண்ணாத்துரை
K. R. இராமசாமி

மற்றும் பல தோழர்கள் நடிக்கும்

★ சந்திரமோகன் ★

நாடகம் நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம் :— வரவேற்பாளர் ரூ. 5—0—0.
பிரதிநிதி ரூ. 1—0—0. ரூ. 2—0—0 (உணவு உள்பட)
பார்வையாளர் ரூ. 0—8—0

வரவேற்புக் குழுவினர்.

தெ. ஆ. இந்தியர் அவதி

ஜோஹன்னஸ்பர்க், டிச 22—

டோக்ஸ் பார்க்கில் நகராட்சி மான குடிசைகளில் இந்தியர்கள் வசித்துக் கஷ்டப்படுகிறார்கள் என்று, பத்திரிகைகளில் வெளியான செய்தியைத் தொடர்ந்து டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ் தலைவர்களான டாக்டர் தாதி, நகரசபை ... ர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் சிலர் அப்பிரதேசத்திற்குச் சென்று நேரில் பார்வையிட்டனர்.

தோழர் நகாலியா ஒரு பேட்டியில் கூறியதாவது: சேரிகளில் உள்ளதைவிட நகராட்சி மான குடிசைகளில் வசித்து வருகிறார்கள். இந்த இடத்தையும் காலிசெய்யும்படி இக்குடிசைகளை எங்கே அழித்து விடுவார்களோ என்ற பீதி இருந்து வருகிறது.

வீடுவாசல் இல்லாத இந்தியர்களுக்கு, இவைகளை விட்டால் வேறு வழியில்லை, இக்குடிசைகளுக்குக் கதவுகள் கிடையாது இந்தியர்களுக்கு வேறு இடத்தில் தக்கபடி வசிக்க ஏற்பாடு செய்யாதிருந்த பட்சத்தில், இந்த இடத்தைவிட்டு அவர்கள் வெளியேறமாட்டார்கள். அவர்களுக்கு டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ் உதவி செய்யும்.

பிறப்பு

சென்னை, டிச. 22—

சென்னைத் தோழர் செ. கோபால கிருஷ்ணன் பி ஏ பி. டி. அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் கோதநாயகிஅம்மையாருக்கு 21-12 49-ல் பெண்மகவு பிறந்ததைக் குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கும் பொருட்டு, 'மாலை மணி''யின் வளர்ச்சிக்குத் தோழர் வி. கே. நாகலிங்கம் அவர்களால் ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது. (வாழ்த்துகிறோம். மகிழ்ச்சி! ஆ-ர்)

ரஷ்யாவுக்கு 'டிரயம் வரேட்' ஆட்சியா?

லண்டன், டிச 22—

பிறந்த நாள் விழாவுடன் மார்ஷல் ஸ்டாலின் அதிகாரத்திலிருந்து விலகிக்கொண்டு விடலாம் என்றும், மூவர் (டிரயம் வரேட்) ஆட்சி ஏற்படுவதை அவர் அங்கீகரிக்கலாம் என்றும், அநேகமாக இது சம்பந்தமான பிரகடனம் சீக்கிரமே வெளியாகலாம் என்றும் பலத்த வதந்திகள் இருந்து வருகின்றன.

எதிர்காலத்தில் நிர்வாக முறை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அப்பிரகடனத்தில் குறிப்பிடப்படலாம் என்றும், தனக்குப் பின் பதவிப் போட்டி ஏற்படாமல் செய்யவே இவை செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது. (குளோப்)

உலக பாங்கி கமிஷன் தூதுக்குழு

நியூயார்க், டிச. 22—

இந்தியா. பாகிஸ்தான், சிலோன், சயாம் ஆகிய நாடுகளுக்கு வருகை தருவதற்காக உலக பாங்கி தூதுக் குழு இக்கிருந்து புறப்பட்டுவிட்டது.

இக் குழுவினர் முதலில் தாய்லாந்து சென்றுவிட்டு, பின்னர் இந்தியாவுக்கு வருவர். 1949-ல் இந்தியாவின் நிதிப்பொருளாதார நிலையைப் பரிசீலனை செய்து, மேலும் கடன் உதவி அளிப்பதற்கான சிபார்சுகளை பாங்கிக்கு சமர்ப்பிப்பர் என்று தெரிகிறது. இதுவரை இந்தியாவுக்கு சர்வ தேச பாங்கி இரு தடவைகடன் உதவி அளித்திருக்கிறது.

சர்வ தேச பாங்கியில் பாகிஸ்தானும், உறுப்பினராகச் சேர விரும்புவதாக தெரிவித்திருப்பதால் இக் குழுவினர் அமெரிக்காவுக்குத் திரும்பும் வழியில் கராசிக்கும் வருகை தருவர்.

NATIONAL CALL

(நேஷனல் கால்)
திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து வெளிவரும் ஆங்கில வார இதழ்
தனிப் பிரதி 0—2—0
ஆண்டு சந்தா 6—0—0
முன் பணம் கட்டிடம்
விற்பனையாளர்கள் தேவை.
விவரங்கட்கு:— பொறுப்பாளர்,
நேஷனல் கால்,
சென்னை—17.

வானொலி

(24-12-49 சனிக்கிழமை)

சென்னை
[211·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 பி. எஸ். பத்மாவதி-பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)

பிற்பகல் :

1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 சிறுவர் நிகழ்ச்சி

மாலை :

4-00 குழந்தைகளுக்கு (ஆங்கிலம்)
5-30 எம். சாரதாம்பாள்—வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 அலமேலு பட்டாபிராமன்-பாட்டு

இரவு :

7.00 டி. என். ராமச்சந்திரா-வயலின்
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
7-45 இசை விழா ஒலிப்பதிவு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 சி. பி. ராமசாமி அய்யர்—பேச்சு
9-30 இசை விழா ஒலிப்பதிவு
10-30 முடிவு

திருச்சி
[395·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 எஸ். டி. ராஜப்பா—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 எஸ். சுவாமிநாதய்யர்—வயலின்
8-30 கர்நாடக இசை (இசைத்தட்டு)

பிற்பகல் :

1.00 எஸ். சுவாமிநாதய்யர்—வயலின்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பள்ளிக் குழந்தைகளுக்கு
2-00 தமிழில் செய்திகள்
2-10 பல்கலைக் கழகங்களுக்கு (கல்லூரிச் செய்திகள்)

மாலை :

5-00 எஸ். டி. ராஜப்பா—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-30 நேயர் விருப்பம் :
7-45 சென்னையில் உள்ளபடி.
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 இரு புல்லாங்குழல்கள்
9-30 சென்னையில் உள்ளபடி.
10-00 முடிவு.

வியட்னாமுக்கு வழங்கப்படும் சுதந்தரத்தின் அந்தரங்கம்

—————;0:—————

பிரெஞ்சு சர்க்காரின் கண் துடைப்பு வித்தை

பாரிஸ், டிச. 22—

வியட்னாமுக்கு 'சுதந்தரம்' டிசம்பர் 30-ந் தேதிக்குள் கொடுக்கப்பட்டுவிடும் என்று கூறப்படுகிறது. சிறுகச்சிறுக அதிகாரமாற்றக் கொள்கை அமுல் நடத்தப்படுவதாகவும், ஆகவே அதிகார மாற்றத்திற்கான சிறப்பு விழா எதுவும் இராது எனத் தெரிகிறது.

உயர்தர பதவிகளை வகிக்கக்கூடிய அதிகாரிகள் இப்பொழுதில்லாததால் சில, பிரெஞ்சு அதிகாரிகளே பதவியில் நீடித்து இருக்க அனுமதிப்பார்களாம். ஆனால், இந்த பிரெஞ்சு அதிகாரிகள் பாவ்டே தலைமையிலுள்ள வியட்னாம் சர்க்காரிடம் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்களாம். பாதுகாப்பு விஷயத்தில், மற்றும் சில நிர்வாக விஷயங்களில் பிரான்ஸையே வியட்னாம் நம்பியிருக்கவேண்டுமாம்.

சிரியாவில் புது மந்திரி சபை நிறுவ முயற்சி

டெஹ்ரான், டிச. 22—

சிரியாவின் பிரதம மந்திரி காலித் எல் அஜம் புது மந்திரிசபை அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை கட்சித் தலைவருடன் நடத்த ஆரம்பித்திருக்கிறார் என்று டாமஸ்கஸ் செய்தி ஒன்று கூறுகிறது. மெஜாரிட்டியான ஆதரவு கட்சியைக் கொண்டு மந்திரிசபை அமைக்க முடியாவிட்டால், கலப்பு மந்திரிசபை அமைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

புது மந்திரி சபையிலும் இப்பொழுதுள்ள மந்திரிகள் இடம் பெறலாம் என்று தெரிகிறது.

இந்தியக் குடியரசு ஆரம்ப விழா

இந்திய சர்க்கார் அழைப்பை நோவல்பேக்கர் ஏற்றார்

லண்டன், டிச. 22—

இந்தியக் குடியரசு ஆரம்ப விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று இந்திய சர்க்கார் அனுப்பியிருந்த அழைப்பை பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி நோவல்பேக்கர் ஏற்றுக்கொண்டுவிட்டார். இவர் கொழும்பு மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்புகையில், புதுடில்லிக்கு வந்து இரண்டு நாள் தங்கி விழாவில் கலந்துகொள்வார்.

பாகிஸ்தான் சர்க்கார் அழைப்பையும் நோவல்பேக்கர் ஏற்றிருப்பதால், கராசிக்கும் சென்று அங்கு 48 மணி நேரம் தங்கியிருப்பார்.

சிரியாவில் நிலச் சீர்திருத்தம்

புது சர்க்கார் திட்டத்தை அமுல் நடத்தும்

பாரிஸ், டிச, 22—

நிலச்சீர்திருத்தத்தை புது சிரிய சர்க்கார் நடத்திவைக்கும் என்றும், முன்பு புரட்சியினும் பதவியை சமீபத்தில் கைப்பற்றிய பாதுகாப்பு மந்திரியாக உள்ள அகரம் ஹரானி இதை நடத்தி வைப்பார் என்றும் இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

நிலச்சுவான்தாரர்களைப் பலப்படுத்தி, விவசாயிகளையும் நிலங்கள் ஏற்படும்படி செய்யப்படும்,என்றும் பின்னர் ஒருவரிடம் இவ்வளவுதான் நிலம் இருக்கலாம் என்று சட்டம் பலப்படும் என்றும் இந்த சட்டம் அமுல் நடந்துபோன காலவிஷயங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் அவர் ஒரு பேட்டியில் கூறினாராம்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.